செ.வெ.எண்.598 நாள்.22.11.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்,**
**பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழுத்தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்**

******

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்று (22.11.2017) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (2016-2018) மதிப்பீட்டுக்குழு ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பள்ளிகல்வித்துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை ஆகிய துறைகளின் கீழ் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள், நடைபெற்ற திட்டங்கள் மற்றும் திட்டத்தின் காலவரையறை, அதன்பயன், அத்திட்ட செயல் முறை வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலை ஆகியன குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழுத்தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மேலும், ஆய்வுக்கூட்டத்தில் 428 பயனாளிகளுக்கு ரூ.2,97,81,563 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வருவாய்த்துறையின் கீழ் 153 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை மற்றும் முதலமைச்சரின் உழுவர் பாதுகாப்புத்திட்ட நிதியுதவியும், 253 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. சமூக நலத்துறை சார்பில், 20 பயனாளிகளுக்கு திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்கமும், மேலும். மாவட்ட மேலாளர் தாட்கோவின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு கார் வாங்க மானியத்தில் கடனுதவி வழங்கப்பட்டது.

மதிப்பீட்டுக்குழு தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், பல்வேறு துறைகளின் சார்பாக பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று இக்குழு பரிந்துரை செய்துள்ளது. உத்திரமேரூர் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக சுற்றுசுவர் கட்டுவதற்கும், பல்வேறு இடங்களில் நில ஆர்ஜினம் செய்யப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

மக்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட வேண்டும் எனவும், பம்மல் நகராட்சி, நாகல்கேணி, அனகாபுத்தூர், திருநீர்மலை, மீனம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளிகளில் வகுப்புகள், ஆய்வகங்கள், சுற்றுசுவர், நூலகங்கள், சைக்கிள் நிறுத்துமிடம் சுத்தகரிக்கப்பட்ட குடிநீர், அமரும் இருக்கைகள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என அரசுக்கு பரிந்துரை செய்ய உள்ளோம். மலைவாழ் மக்களுக்கு 2 மாத காலத்திற்குள்ளாக சாதி சான்றிதழ் கொடுக்க வேண்டுமென அரசு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குகிறோம். குறுமனஞ்சேரி அரசு ஆரம்ப நிலை சுகாதார நிலையத்துக்கு இடம் மற்றும் கட்டிட வசதி செய்து கொடுக்க வேண்டும் எனவும் உத்திரமேரூர் மற்றும் மதுராந்தகம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு சொந்த கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கவும், திரிசூலத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டவும், செய்யூர் அரசு மருத்துவமனைக்கு இரண்டு மருத்துவர்கள் நியமிக்கவும் அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். மேலும், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதியிலுள்ள தலைமை மருத்துவமனைகளிலும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் போன்ற உபகரணங்கள் வாங்க கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென கோரிக்கை எழுப்பட்டது. அதற்கு சுமார் ரூ. 50 இலட்சம் கூடுதலாக அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 9 நகராட்சிகளில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அதனை உடனடியாக நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்றும், மழைநீர் வீணாவதை தடுப்பதற்கு காஞ்சிபுரம் ஆறுகளில் தடுப்பணை கட்டுவதற்கும், அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று இந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறு தொகுதிகளிலும் என்னென்ன வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை வரப்பெற்றதன் அடிப்படையில் அரசு விரைவாக நிறைவேற்றி கொடுக்க நாங்கள் பரிந்துரை செய்கிறோம் என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மதிப்பீட்டுக்குழுத்தலைவர் அவர்கள் தலைமையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிளார் அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் முட்டையுடன் கூடிய உணவு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் முன்பருவக்கல்வி முறை விவரங்களை கேட்டறிந்தார். அடுத்தாக, திருப்புக்குழியிலுள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள உள்நோயாளிகள் பிரிவு, பிரசவ பிரிவு, புற்றுநோய் பிரிவு, காசநோய் பிரிவு, பல் மருத்துவ பிரிவு, சித்த மருத்ததுவ பிரிவு, கண் மருத்துவ பிரிவு மற்றும் எக்ஸரே பிரிவு, பரிசோதனை கூடம் மற்றும் மருந்தகங்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வாலாஜாபாத்தில் ரூ.1 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு ஆதிதிராவிட நல மாணவியர் தங்கும் விடுதியில் ஆய்வு மேற்கொண்ட தலைவர், அங்கு தங்கியிருந்த மாணவிகளிடம், விடுதியில் வழங்கப்படும் உணவு மற்றும் வசதிகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் சமையல் அறை மற்றும் உணவு கூடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, விடுதியில் தங்கும் மாணவிகளிடம் நன்கு கல்வி கற்று பயனடையுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.18 லட்சத்து 41 ஆயிரம் மதிப்பீட்டில் 10 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளதை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் பார்வையிட்டார்.

இவ்வாய்வின் போது மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்கள், திரு.ஆர்.கனகராஜ் அவர்கள், திரு.இரா.குமரகுரு அவர்கள், திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், திரு.எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்,, திரு.கே.பி.பி.பாஸ்கர் அவர்கள், திருமதி.ப.மனோன்மணி அவர்கள், ஆகியோர்களும், காஞ்சிபுரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.பழனி,திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், திரு.க.சுந்தர், திரு.என்.புகழேந்தி, திரு.இ.கருணாநிதி, திரு.ஆர்.டி.அரசு, மேலும், சட்டப்பேரவை செயலர் திரு.க.பூபதி அவர்கள், துணை செயலர் திரு.சி.எல்.சிவகுமரன் அவர்கள், குழு அலுவலர் திரு.சு.பாலகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**காஞ்சிபுரம்.**